ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2381 - 2024 අප්‍රේල් මස 19 වැනි සිකුරාදා - 2024.04.19

*2381 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1072 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1072 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1066 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1065 - B 082561 - 5,403 (2024/04)

# ஆய விற்பனையும் குத்தகையும்

## புத்தளம் பிரதேச செயலகப் பிரிவு
## கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை செய்தல் 2024 - 2025

*2024.07.01ஆந் திகதி தொடக்கம் 2025.06.30 ஆந் திகதி வரை*

*2024, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2025, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அது உரிய முறையில் தயாரிக்கப்பட்ட படிவமாக இருக்க வேண்டும். மேலும், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகைப் பணத்தை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் குறைந்தபட்சம் 15 % பெறுமதியுள்ள வருமான அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. முறையாக தயாரிக்கப்பட்ட பத்திரங்கள் மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "............................. இலக்க ........................ கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படல் வேண்டும். கள்ளுத்தவறணை கேள்விப்பத்திரம் 2024.05.08ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக புத்தளம் பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தளம் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இட வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2024.05.08ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் புத்தளம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணையின் மீள் விற்பனை 2024.06.05 ஆந் திகதி மு. ப.10.30 மணிக்கு மீண்டும் நடைபெறும். அன்றைய தினம் விண்ணப்பங்கள் வர்த்தமானி அறிவித்தலின் படி அமைதல் வேண்டும்.

7. இது தொடர்பில் மேலதிக விபரங்களை புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
(தொலைபேசி இலக்கம் : 032-22265358)

எஸ். பீ. வீரசேகர,
பிரதேச செயலாளர்,
புத்தளம்.

பிரதேச செயலகம்,
புத்தளம்,
2024, மாச்சு 25.

**அட்டவணை**

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு | சேனைக் குடியிருப்பு | காலை10.00 மணி | இரவு 9.00 மணி | 2024.05.08 மு.ப.10.30 மணி | 1,000.00 |

04-272

## மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவு

2024ஆம் ஆண்டு ஆடி மாதம் 1 ஆந் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளுத்

தவறணை குத்தகை விற்பனை – 2024/2025

2024 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் கள்ளு சில்லறை விற்பனைக்காக 1982 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியான கள்ளு குத்தகை விற்கும் நிபந்தனைகளுக்கு அமைவாக கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடும் கள்ளுத் தவறணைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் பிரதேச செயலாளர் அலுவலகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மாதிரி கேள்விப்பத்திரமொன்றில் தயார் செய்யப்பட வேண்டியுள்ளதுடன் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்பிலிட்டமைக்கான பற்றுச் சீட்டும் குறிப்பிட்ட கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டும் விலையின் 15% க்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. முறையாக நிரப்பப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் பொறியிடப்பட்டு கடித உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் "இல. ............கள்ளுத் தவறணைகளுக்கான கேள்விப்பத்திரம் " என்று குறிப்பிட்டு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கள்ளுத் தவறணைகளுக்கான பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024.06.05 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பதாக மஹவெவ பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லாதவிடத்து அக்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பு மஹவெவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் முன் வைப்பதற்கு 1982.08.20 ஆந் திகதி வெளியிடப்பட்ட இல.207 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணை நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

5. 2024.06.05 ஆந் திகதி மு.ப. 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்ததும் கேள்விப் பத்திரங்கள் உடனே திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில் கேள்விப்பத்திரங்கள் முன்வைத்த அனைவரும் மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருக்க வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதிக்கு விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணைகள் குத்தகை மீண்டும் விற்றல் 2024.07.03 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும். அத்திகதிக்கு கேள்விப்பத்திரங்கள் முன்வைப்பது மேற்குறிப்பிட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கள்ளு நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

7. இது பற்றிய மேலதிக விபரங்களை மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 032-2254231, 032-2252061.

பீ.டப்.எம்.எம்.எச்.பண்டார,
பிரதேச செயலாளர்,
மஹவெவ.

பிரதேச செயலகம்,
மஹவெவ,
2024.03. 27.

**அட்டவணை**

| தவறணை இல. | கிராமம் | வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|
| 16 | அடப்பரகம | 500.00 |
| 17 | மட்டாகொட்டுவ | 500.00 |
| 18 | தொடுவாவ - (வடக்கு) | 1,000.00 |

04- 273

## மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகப் பிரிவு ஆறுமுகத்தான் குடியிருப்பு

*கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை 2024 யூலை– 2025 யூன்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1982 ஆம் ஆண்டின் கள்ளுத்தவறணை குத்தகைக்கு விற்பனை விதிகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேசத்திற்குட்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பு கள்ளுத்தவறணைக்கான 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2025, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா ( ரூபா 1,500.00) பணத்தை ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்பட்டும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெறமுடியும். கேள்விப்பத்திரத்துடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டும் இணைகப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2024.05.01ஆந் திகதி முதல் 2024.05.15 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.*

*2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% இற்குக் குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*3. பிழையாக பூரணப்படுத்தப்படும் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.*

*4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை மீளப் பெற விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப் பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் மீளச் சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.*

*5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.*

*6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.*

*அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்று நிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)*

*7. ஏனைய விபரங்கள் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

கே. தனபாலசுந்தரம்,
பிரதேச செயலாளர்,
ஏறாவூர்பற்று,
செங்கலடி.

பிரதேச செயலகம்,
ஏறாவூர்பற்று,
செங்கலடி,
*2024.04.19.*

**அட்டவணை**

**கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்**

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| ஆறுமுகத்தான் குடியிருப்பு | TT No. 1 | 2024.06.11 | மு.ப. 10.00 மணி |

குறிப்பு.- 1. கேள்விச் சபை 2024.06.11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்குக் கூடும்.

2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் மறு கேள்விச் சபை 2024.06.18ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

04- 271

---

## வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவு

## 2024/2025 கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை

2024ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207ஆம் இலக்க கள்ளுத் தவறணை குத்தகைக்கு கொடுக்கப்படும் நிபந்தனைகளுக்கமைவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமப்படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக முத்திரையிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "........................... ஆம் இலக்க ....................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 2024.05.14 ஆந் திகதி தொடக்கம் 2024.05.28 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்பு வென்னப்புவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப் பத்திரப்பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2024.05.28 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைவதுடன் உடனே எல்லா கேள்விப் பத்திரங்களும் திறக்கப்படும். அச்சமயத்தில் கேள்விப்பத்திரக் கோரிக்கையாளர்கள் அல்லது அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் இச்செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. மேற் குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை மீண்டும் 2024, யூன் மாதம் 25ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீண்டும் இடம்பெறுவதுடன் இதற்கான கேள்விப் பத்திரங்கள் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி மேற்குறிப்பிடப்பட்டவாறு அமைதல் வேண்டும்.

7. இது தொடர்பான மேலதிக விபரங்கள் வென்னப்புவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (032- 3138640).

எச்.எம்.என்.ஹேரத்,
பிரதேச செயலாளர்,
வென்னப்புவ.

பிரதேச செயலகம்,
வென்னப்புவ.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப் பத்திர வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 1. | வென்னப்புவ பி.செ. பிரிவு | தம்பரவில் | 2024.05.28 மு.ப. 10.30 மணிக்கு | 500.00 |
| 2. | வென்னப்புவ பி.செ. பிரிவு | நஞ்சுண்டான்கரை | 2024.05.28 மு.ப.10.30 மணிக்கு | 250.00 |
| 3. | வென்னப்புவ பி.செ. பிரிவு | வைக்கால் | 2024.05.28 மு.ப.10.30 மணிக்கு | 1,000.00 |
| 4. | வென்னப்புவ பி.செ. பிரிவு | பொரலெஸ்ஸ | 2024.05.28 மு.ப.10.30 மணிக்கு | 500.00 |
| 5. | வென்னப்புவ பி.செ. பிரிவு | தும்மலதெனிய | 2024.05.28 மு.ப.10.30 மணிக்கு | 1,000.00 |
| 6. | வென்னப்புவ பி.செ.பிரிவு | உள்ஹிட்டியாவ | 2024.05.28 மு.ப.10.30 மணிக்கு | 500.00 |
| 7. | வென்னப்புவ பி.செ. பிரிவு | லுணுவில | 2024.05.28 மு.ப.10.30 மணிக்கு | 500.00 |
| 8. | வென்னப்புவ பி.செ. பிரிவு | வென்னப்புவ | 2024.05.28 மு.ப.10.30 மணிக்கு | 2,000.00 |
| 9. | வென்னப்புவ பி.செ. பிரிவு | நயினமடம | 2024.05.28 மு.ப.10.30 மணிக்கு | 1,000.00 |

| தவறணை திறக்கப்படும் நேரம் | மூடப்படும் நேரம் |
|---|---|
| மு.ப.10.00 | பி.ப. 9.00 |

04-346

---

## கல்பிட்டி பிரதேச செயலகப் பிரிவு

கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை 2024 - 2025

2024 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2025, யூன் மாதம் வரை

*2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2025 யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள 12 மாத காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982, ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.*

2. எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமப் படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக கல்பிட்டி பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "................... ஆம் இலக்க ............. கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படல் வேண்டும். 2024.05.10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் கல்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2024.05.10 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் இச் செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை மீண்டும் 2024.06.07 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்களை கல்பிட்டி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜே.எம்.சமில ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கல்பிட்டி.

பிரதேச செயலகம்,
கல்பிட்டி,
2024, ஏப்பிறல் 01,
032- 4934205.

**அட்டவணை**

| இல. | பிரிவு | எல்லை | தவறணை | கேள்விப் பத்திர முடிவுத் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|
| 1. | கல்பிட்டி | தளுவை | கள்ளு | 2024.05.10 மு.ப.10.30 | 1,000.00 |
| 2. | கல்பிட்டி | ஏத்தாளை | கள்ளு | 2024.05.10 மு.ப.10.30 | 1,000.00 |

04- 342

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

**லங்கா ரேட்டிங் ஏஜன்ஸி லிமிடட்**

***2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59(2) இன் கீழான அறிவித்தல்***

லங்கா ரேட்டிங் ஏஜன்ஸி லிமிடட் (கம்பனி) தனது முதலீட்டு கணக்கிலிருந்து நூற்றி எழுபத்தைந்து (175,000.000) மில்லியனைப்பற்றுச் செய்து எஞ்சியுள்ள நஷ்டத்திற்கு பொருந்தியுள்ள தொகையில் வைப்பிலிடுவதன் மூலம் இருநூற்று இரண்டு மில்லியன் நூற்றி ஐம்பத்தி நான்காயிரத்து எழுநூற்று பதின்மூன்று ரூபாவிலிருந்து (202, 154, 713) இருபத்திஏழு மில்லியன் நூற்றி ஐம்பத்து நான்காயிரத்து எழுநூற்றுப் பதின்மூன்று (27, 154, 713) ரூபாவாக தனது கூறப்பட்ட மூலதனத் தொகையைக் குறைத்துக் கொள்வதற்கு உத்தேசித்துள்ளது என்பதை இத்தால் அறியத் தருகின்றது. கம்பனியிலிருந்து வழங்கப்பட்ட பங்குத் தொகைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது.

சபையின் அனுமதிப்படி,

கம்பனிச் செயலாளர்.

2024, ஏப்பிறல் 04.

04-341

---

## ஏல விற்பனைகள்

**பேன்ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ யின் பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் ஏல விற்பனை அறிவித்தல்*

பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ யினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள கீழ்க்காணும் அதிகாரத்தின் பிரகாரம், கீழ் குறிப்பிடப்பட்ட ஆதனம் பின்வரும் திகதியில் பின்வரும் நேரத்தில் அவ்வாதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில பதிவுப் பிரிவிற்குள், பிட்டிகல் கோரளை தெற்கின் கம்மல் பத்து, நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவு, நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, மெத பஹல கட்டுனேரிய கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட, பஹல கட்டுனேரிய கிராமத்தில் அமைந்துள்ள "மாதன்கஹவத்த" எனும் காணி (உரிமம் பெற்ற நில அளவையாளர் W. S. S. A. பர்னாந்து அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2006.01.18 ஆந் திகதிய வரைபட இல. 1595 இல் விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட காணித்துண்டு 01 இன் மீளளவையாகும்) உரிமம் பெற்ற நில அளவையாளர் M. D. பர்னாந்து அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1986.09.26 ஆந்திகதிய வரைபட இல. 7095 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 02 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டாகும். (விஸ்தீரணம்: 00ஏ. 00றூ. 14பே.)

2024, மே 30 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு

"கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான" முதுபொருதொட்டகே சன்ஜய பெரேரா என்பவர் பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ இன் சார்பில் சிலாபத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு W. ஸ்ரீனா நிலுக்ஷி திஸ்ஸேரா அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2020.08.18 ஆந் திகதியிடப்பட்ட இல. 3595 எனும் முதன்மை ஈட்டுமுறியின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2024.03.15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2024.03.07ஆந் திகதிய த ஐலன்ட் மற்றும் திவயின, பத்திரிகையையும் 2024.03.11 ஆந் திகதிய தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- வென்னப்புவ நகரத்திலிருந்து சிலாபம் பிரதான பாதையின் ஊடாக சுமார் 03 கிலோ மீற்றர் வரை வந்து, ஜன்ஸா பாதைக்கு (தார் பாதை) இடது பக்கம் திரும்பி மேலும் சுமார் 200 மீற்றர் வரை பயணிக்கும் போது சொல்லப்பட்ட ஆதனமானது பாதையின் இடது பக்கத்தில் முன்பக்கம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:

(1) கொள்முதல் விலையில் 10% ;
(2) உள்நாட்டு இறைவரி மற்றும் வெட்வரி 1% ;

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் கொள்முதல் விலையில் 2.5% ( இரண்டரை வீதம்);

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவுகள் ;

(5) விற்பனை நிபந்தனை தொடர்பாக நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தல் கட்டணம்;

(6) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் மற்றும் விற்பனைக்கான வேறு கட்டணங்கள்.

ஏல விற்பனைத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்முதலில் மிகுதி 90% பணத்தொகையை வங்கிக்கு செலுத்துதல் வேண்டும். மேற்கூறிய பணத்தொகையானது 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறுமிடத்து செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% இழக்க வேண்டி ஏற்படுவதுடன், அவ்வாதனத்தை மீள் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: முகாமையாளர் - கடன் அறவிடுதல், பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ, கொழும்பு 3, தொலைபேசி: 011-4667218, 011-4667220.

என்.யூ. ஜயசூரிய,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
மாவில்மட, கண்டி.
தொலைபேசி இல.: 077- 3067360, 076- 1375993, 071- 8446374.
தொலைநகல் இல.: 081-2210595.

04- 373

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.